**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.228/2012**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

P.W.2 வாசுதேவன், வயது 43, த/பெ பெருமாள்

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் 1 மற்றும் 2 தரப்பு)**

இவ்வழக்கில் என்னை வழக்கறிஞர் ஆணையராக 01.12.2014 அன்று நியமித்தார்கள் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை எப்போது முதல் முதலாக பார்வையிட சென்றேன் என்றால் 28.03.2015 அன்று வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுத்து அதன் பின்னர் எப்போது தாவா சொத்தை பார்வையிட சென்றேன் என்று எனக்கு தற்போது நினைவில்லை. என்னுடைய வழக்கறிஞர் அறிக்கையில் எத்தனை முறை அறிவிப்பு கொடுத்து பார்வையிட சென்றேன் என்பதை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. ஒருமுறை நான் தாவா சொத்தை பார்வையிட சென்று பார்வையிடாமல் திரும்பி வந்தேன் என்பதற்கான காரணத்தை என்னுடைய அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பழைய FMB (புல வரைபடம்) மற்றும் புதிய FMB (புல வரைபடம்) வேண்டும் என்ற விவரத்தை நான் இந்நீதிமன்றத்திற்கு தெரிவித்தேனா என்றால் இல்லை. FMB (புல வரைபடம்) எதற்கு வேண்டும் என்பதற்கான காரணத்தை நான் நீதிமன்றத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3. நான் வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதிகள் 3 முதல் 9 வரையானவர்களுக்கு முன் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு முன் அறிவிப்பினை கொடுக்கவில்லை என்பதற்கான காரணத்தை என் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய அறிக்கையில் எத்தனை வரைபடங்கள் உள்ளது என்றால் 4 வரைபடங்கள் தாக்கல் செய்துள்ளேன். அதை யார் கொடுத்தது என்றால் தற்போது எனக்கு நினைவில்லை, அதில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் கையொப்பங்கள் இல்லை என்றால் சரிதான்.

4. என்னுடைய அறிக்கையுடன் இணைத்துள்ள 2 கிரைய பத்திரங்களை யார், எதற்காக கொடுத்தார்கள் என்பதை என் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பட்டா, சிட்டா, வழக்கறிஞர் அறிவிப்பு, புல வரைபடம் 2 ஆகியவற்றை யார் கொடுத்தார்கள் என்று என் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய அறிக்கையில் 4 வரைபடங்கள் தாக்கல் செய்துள்ளேன், அதன் பின்பக்கம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் கையொப்பங்கள் இல்லை என்றால் சரிதான். சர்வேயர் யார் என்னுடன் உதவிக்கு வந்தார் என்றால் சர்வேயர் அன்பரசு என்பவர் வந்தார்.

5. 21.02.2023ல் தாவா சொத்தை பார்வையிட்டு, ஆனால் என் அறிக்கையில் 27.09.2023 அன்று 7 மாதங்கள் தாமதமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததற்கு காரணத்தை என் அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 21.02.2023 அன்று பிரதிவாதிகள் ஏதேனும் பிரச்சினை செய்தார்களா என்றால் இல்லை, சாட்சி தன்னிச்சையாக அதற்கு முன்பு 1 தடவை பிரச்சினை செய்தார்கள் என்று கூறினார். மேற்படி விவரத்தை என் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் நிலத்தை அளந்தேன் என்றால் சரிதான்.

6. மேற்படி 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் நிலத்தை அளந்த போது அதில் ஏதேனும் அளவுகள் வேறுபட்டதா என்ற விவரத்தை என் அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் அறிக்கையில் 2ம் பக்கத்தில் சர்வே எண்.153/4ல் மற்றும் 153/5B - 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண். 153/4 யாருடைய பெயரில் உள்ளது என்றால் 2ம் பிரதிவாதி ஆறுமுகம் பெயரில் உள்ளது. என்னுடைய அறிக்கையில் பள்ளிக்கூடம் மற்றும் கால்வாய் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

7. சர்வே எண். 153/5B முன்பு ஒரு நிலம் உள்ளது என்பதை நான் என் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் நிலத்தை அளந்த போது அதில் ஏதேனும் அளவுகள் வேறுபட்டதா அல்லது சரியாக இருந்ததா என்ற விவரத்தை என் அறிக்கையில்

சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய வரைபடத்தில் C,D,E என 3 சர்வே கற்கள் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், மேற்படி 3 கற்களும் 2 சர்வே எண்களை பிரிக்கும் வரப்பில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் சர்வேயர் 3 கற்களுக்கும் ஏதேனும் உட்பிரிவு வழிபாதை உள்ளது என்று புல வரைபடத்தில் குறிப்பிட்டு சொன்னாரா என்றால் இல்லை, நடைபாதை மட்டும் தான் உள்ளது.

8. நான் தாவா சொத்தை பார்வையிட்ட போது வாதிகளின் நிலம் முழுவதும் பயிர் வைக்கப்பட்டிருந்தது, 1, 2 பிரதிவாதிகளின நிலம் கரம்பாக இருந்தது என்றால் சரிதான். என்னுடைய அறிக்கையில் 5ம் பத்தியில் வேறு வழியே இல்லை என்று குறிப்பிட்டுள்ள நிலையில் வாதிகள் எப்படி அவர்கள் நிலத்திற்கு பயிர் வைக்க செல்வார்கள் என்பதை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன், 1 , 2 பிரதிவாதிகளின் நிலம் வழியாகதான் செல்வார்கள். என்னுடைய வரைபடத்தில் வழி பாதை எங்கு தொடங்கி எங்கு முடிகிறது, எவ்வளவு அளவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. தாவா பி அட்டவணை சொத்தில் 15 அடி அகலம் வழிபாதை உள்ளதாக சர்வேயர் அளந்து சொன்னாரா என்றால் இல்லை. புதிய, பழைய வரைபடம் எந்த வருடம் என்றால் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. பள்ளிக்கூடம், கோயிலுக்கு இடையே சென்று ஓடைக்கால்வாய் வழியாக வரப்பில் சென்றால் வாதிகள் நிலத்திற்கு செல்லலாம் என்றால் சரிதான்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**
**பிரதிவாதிகள் 10 மற்றும் 11 தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi,
District Munsif,
Arni